மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி இது தனியாருடைய பட்டா, புன்செய் நிலம். தனியாருடைய பட்டா நிலத்தில் அவர்கள் குடியிருக்கிறார்கள். இவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் அல்ல. இவர்கள் நாயக்கர் வகுப்பை, பிள்ளை வகுப்பை, தேவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். இன்றிருக்கிற அரசின் கொள்கைப்படி தாழ்த்தப் பட்ட மக்களுக்குத்தான் அரசு விலைக்கு வாங்கிக்கொடுக்கும். அரசு நிலமென்றால் கொடுக்கலாம். ஆனால். மற்றவர்கள் நிலத்தில் இருக்கும்போது அரசு அந்த நிலங்களை வாங்கிக் கொடுக்க இயலாது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: இம்மாதிரி ஹரிஜனங்கள் அல்லாத பிற்பட்ட வகுப்பு மக்களுக்கு குடியிருப்புக்காக நிலங்கள் ஆர்ஜிதம் செய்து கொடுக்க உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசாங்கக் கொள்கை இன்று அல்ல தொன்றுதொட்டு இருந்துவரும் கொள்கை என்னவென்றால் ஆதிதிராவிட மக்களுக்கு மட்டும் அரசாங்க நிலங்களைக் குடியிருப்பிற்காகக் கொடுத்தும், அரசாங்க நிலங்கள் அல்லாத நிலங்களையும் அரசாங்கம் விலைக்கு வாங்கிக்கொடுக்கும். ஆனால் ஆதிதிராவிட மக்கள் அல்லாத மக்களுக்கு அவர்கள் ஏழைகளாக இருந்தால் அவர் களுக்கு அரசாங்க நிலம் கிடைத்தால் கொடுக்கும், அரசாங்க நிலத்தில் குடியிருந்தால் அவர்களுக்குக் கொடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப் பேற்றதற்குப் பிறகு எத்தனை ஏழை எளிய மக்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்பு கிறேன்-

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுக் கேள்வி. லட்சக்கணக்கான பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும்,

கேள்வி எண்கள் 1051 முதல் 1053 வரை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

சதுரங்கப்பட்டணம், புதுப்பட்டணம் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 1054 திரு. கோ. ஆனூர். ஜெகதீசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்பாக்கம் அணுமின் திட்டத்தை அடுத்துள்ள சதுரங்கப்பட்டணம், புதுப்பட்டணம் ஆகிய இரு பகுதிகளுக்கும் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது திட்டம் நிறைவேற்றப் படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) சதுரங்கப் பட்டணம், புதுப்பட்டணம் ஆகிய இரு கிராமங்களுக்கு கிராம குடிநீர் திட்ட அடிப்படையில் குடிநீர் வழங்கும் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) இத்திட்டம் 1981–82–ல் நிறைவேற்றப்படும்.

திரு. பு. கோ. ஆனூர். ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு பெரிய கிராமங்களுக்கும் தனித்தனியான திட்டங்களா அல்லது கூட்டுத் திட்டங்களா? எவ்வளவு தொகை இவைகளுக்கு மதிப்பீடு போடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் தன்னிறைவுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ள 150 ஒன்றியங்களிலே ஒன்று. எனவே, இவ்வூராட்சி ஒன்றியத் திலே அடங்கியுள்ள இந்த இரண்டு கிராமங்களுக்கும் 1981–82லே குடிநீர் வசதி செய்யப்படும் என்ற தகவல்தான் என்னிடத்திலே இருக்கிறது.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகள் இரண்டும் நகரங் களுக்குச் சமமான பகுதிகளாகும். இந்த இரு பகுதிகளுக்கும் இதுவரையில் குடிநீர் வழங்கப்படவில்லை, காரணம். கடலுக்கு அருகாமையில் இருக்கின்ற காரணத்தினால் உவர்ப்பு தண்ணீர் கிடைப்பதால் இதுவரையில் குடிநீர் கொடுக்கவில்லை. ஆகவே, 8,000, 7,000 என்ற அளவிலே ஜனத்தொகை இருக்கக்கூடிய இந்த இரண்டு கிராமங்களுக்கும் மிகப் பெரிய திட்டமாக, போதுமான அளவிற்கு திட்டம் போட்டு அரசு இதனைச் செயல்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இது தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் வருகின்ற காரணத்தால். இந்தத் திட்டங்களைத் தீட்டும் போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி சம்பந்தப் பட்டவர்களோடு பேசினால் ஆவன செய்வதுபற்றி கவனிக்கப் படும்.

திரு, ஆ. வெள்ளைச்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குடிநீர் பிரச்னை தீர்க்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1974 வறட்சிப் பணியில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கல்பாக்கம் அனல் மின் நிலையத்திற்குப் பக்கத்தில் உள்ளது. நீங்கள் 1974க்குப் போகிறீர்கள். கேள்வியாகக் கேளுங்கள்.

1981 மே 11]

திரு. ஆ. வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே' தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கப்படும் திட்டமா, கூட்டு முயற்சியிலே இருந்துவரும் குடிநீர் திட்டமா? (பதில் இல்லை),

குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தர்மபுரியில்
வீடுகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 1055 திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) தமிழக குடிசை மாற்று வாரியத்தின் மூலம் தர்மபுரி நகரில் உள்ள குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

ஆ) செய்ய முடியுமென்றால் எப்போது செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நிதிப் பற்றாக்குறை நிலையின் காரணமாக குடிசைமாற்றுத் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்படும் பணி தற்போது செயல்பட்டுவரும் கோவை, திருச்சி மதுரை, சேலம் ஆகிய நான்கு மாவட்டத் தலைநகரங்களில் மட்டுமே தொடர்ந்து செயல்படுத்தப்பட்டால் போதும் என்றும், இப்பணி ஏனைய வெளியூர் மாவட்டத் தலை நகரங்களுக்கும் சிறு நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டாம் என்றும் அரசு முடிவெடுத்துள்ளது. எனவே தர்மபுரி நகரில் இத்திட்டத்தின்கீழ் குடிசைகளை மாற்றி வீடுகள் கட்டித் தருவதற்கில்லை. ஆனால், இங்கு இருக்கும் குடிசைவாழ் மக்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களின்மூலம், நகர்ப்புற வீட்டு வசதி சங்கங்களின் விதி முறைகட்குட்பட்டு கடன் உதவி தொடர்ந்து கொடுக்கலாம் என்று அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அரசால் வீடுகள் கட்டித் தரப்படுகின்ற போது, அந்த வீடுகள் ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்து பழைய வீடுகள் ஆகிவிடுகின்றன. அதன் காரணத்தினால், ஆண்டுக்கு ஒரு முறை மராமத்து, வெள்ளை அடித்தல் போன்ற பணிகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

ம ண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, சேலம் போன்ற மாவட்டங்களிலே கட்டப்படுகின்றன. ஆகவே, தேவைப்படு கின்றபோது அந்த வீடுகள் பழுதுபார்க்கப்படுகின்றன.

திரு ஏ. சி. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் நடப்பு ஆண்டில் 4, 5 மாவட்டங்களில் மட்டும் இம்மாதிரியான வீடுகள் கட்டாமல், மற்ற மாவட்டத்